25 JAN 2000

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

VALAMPURI

விலை
ரூபா
5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 11 செவ்வாய்க்கிழமை (25 - 01 - 2000) VALAMPURI ஒலி: 37

## செம்மணிப் புதைகுழி விவகாரம்

# அரசின் அசமந்தபோக்கு;மந்தநிலை

# யாழ். நீதிமன்றில் நீதிவான் விசனம்!

(விசேட அலுவலக செய்தியாளர்)

**1996 - 97ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் நூற்றுக்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு வருவதையும் மேற்படி விசாரணைகளில் ஏற்பட்டுவரும் மந்தநிலை வேதனை அளிப்பதாகவும், யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் நீதிமன்றில் பகிரங்கமாக தனது விசனத்தை வெளியிட்டார்.**

செம்மணிப்புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகள் நேற்று யாழ். நீதிமன்றில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திரு.எம். இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்றன. இந்த விசாரணைகளின் போது அரச சட்டவாதி யசந்த கோதாகொட வழக்கு விசாரணைகளை மேலும் ஆறு வாரகாலத்துக்கு ஒத்திவைக்கக்கோரி சமர்ப்பித்த மனு மீதான வாதத்தின் போது அவர் தனது விசனத்தை வெளியிட்டார்.

வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரச சட்டவாதி வழக்கு விசாரணையை மேலும் 6 வாரகாலத்துக்கு ஒத்திவைக்கக் கோரும் மனுவை நீதிவானிடம் சமர்பித்தார் யாழ்பாணத்தில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலைகளும் தொடர்ந்து நடத்தப்படும் விசாரணைகள் மூலம் சந்தேக நபர்களை கைது செய்ய போதிய சாட்சியம் இல்லாததாலும், கடந்த நவம்பர் மாதம் 33 பேரின்

(6ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான இருவர் யாழ். நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் நேற்று யாழ். மேலதிக நீதவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நடராஜா, தயாளன், பரமானந்தன் ஸ்ரீரங்கன் ஆகியோரே நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர் இவர்களை இம்மாதம் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை காங்கேசன் துறைத் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப் பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னரங்க காவலரண் பகுதியில் ஐந்து ஆண்களின் சடலம் மீட்பு

மன்னார் கட்டையடம்பன் இராணுவ முன்னரங்க காவலரண்களுக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட ஐந்து ஆண்களின் சடலங்கள் அரச படையினரால் மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துப்பாக்சிச் சூட்டுக் காயங்களுடன் மேற்படி ஐந்து சடலங்களும் அடையாளம் காணப்படுவதற்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள்தெரிவித்தன.

மூன்று நடுத்தர வயதுடைய ஆண்களதும் 2 வயது முதிர்ந்தவர்களுடைய சடலங்களுமே இவ்வாறு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (கு)

## எதிர்காலச் சவால்களை ஏற்க

# மாணவர்களைத் தயார் செய்வோம்

### மஹாபொலவைபவத்தில் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

'புத்தாயிரமாண்டின் சவால்களுக்கும், தேவைகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய வகையில் மாணவர்களைத்தயார்ப்படுத்துவதே தற்போதைய கல்விச் சீர் திருத்தங்களின் நோக்கமாகும்.' என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தனது செய்திக்குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்:

பத்தொன்பதாவது மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது அந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. வைப

(6ம் பக்கம் பார்க்க)

## (பிந்திய செய்தி)

## பூஸாவுக்கு எங்களை மாற்றாதீர்! களுத்துறைக் கைதிகள் எம்.பிக்கு மகஜர்

(கொழும்பு)

'களுத்துறைச் சிறைச்சாலையில் இருக்கும் தமிழ்க் கைதிகளை பூஸாவுக்கு மாற்றுவதை தடுக்க வேண்டும், என்று கோரி சிறைச்சாலைக் கைதிகளின் சார்பாக பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜனுக்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இம்மாத முற்பகுதியில் களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து தமிழ்க் கைதிகளை இடம் மாற்றும் முயற்சி இடம் பெற்று வருவதையடுத்தே இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுளளது.

'சிங்களக் கைதிகளுடன் தமிழ்க்கைதிகளை மாற்றுவது

(6ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறை - மோதல் சம்பவம்.

## சாட்சிகள் இல்லாத காரணத்தால் விரிவான அறிக்கை தரமுடியவில்லை

### இடைக்கால அறிக்கை கூறுகிறது

(கொழும்பு)

மோதல் சம்பவங்களை நேரில் பார்த்தவர்கள் யாரிடமிருந்தும் சாட்சியங்களைப் பெறமுடியாது இருப்பதனால் இது தொடர்பாக விரிவான அறிக்கையைத் தர முடியவில்லை' என்று களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசாரணைக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தலதா மாளிகை மீதான

## குண்டுத் தாக்குதலைக் கண்டித்து கண்டியில் இன்று பேரணி

கண்டி ஸ்ரீ தலதாமாளிகை மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இன்று கண்டியில் நடாத்தப்படவுள்ளது,

தலதா மாளிகை மீதான தாக்குதல் இடம் பெற்ற இரண்டாவதுஆண்டு நிறைவு தினமான இன்று மலையக ஒருங்கிணைந்த பௌத்த சங்கம் என்ற சிங்கள அமைப்பே இந்த எதிர்ப்பு ஊர்வலத்தை ஒழுங்கு செய்துள்ளது:

புனித தலமான தலதா மாளிகைத் தாக்குதலைக் கண்டித்தே இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இன்று பிற்பகல் 1 மணிக்கு கண்டன ஊர்வலமும், பிற்பகல் 2.30 மணிக்கு பொதுக் கூட்டமும்நடைபெறும் என்று மேற்படி அமைப்பு அறிவித்துளளது. (வ-கு)

## அன்புமாணவச்செல்வங்களே!

நாளை வலம்புரியில் **புலமைப் பரீட்சை** வினாக்களும் கடந்த வாரம் வெளிவந்த புலமைப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களும் வெளிவரும் உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

புதன்கிழமை தோறும் வலம் புரியில் புலமைப் பரீட்சை வினாத்தாள்வெளிவரும் என்பதை மறவாதீர்கள். (ஆ-ர்)

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

பசுமாடும் கன்றும் விற்பனைக்குண்டு தொடர்பு 6 8/2 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (கி-27)

## நாளை கும்பாபிஷேகம்

(அச்சுவேலி)

தம்பாலை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்திற்கு முன்பாக உள்ள நாச்சிமார் கோவில் கும்பாபிஷேகம் நாளை 26ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற உள்ளது.

ஆலய முன் மண்டபம் அமைக்கப்பட்ட பின்னர் இக் கும்பாபிஷேக நிகழ்வு இடம் பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (க-57)

## புதிய மின்கம்பங்கள்

(இளவாலை)

மல்லாகம் பகுதியில் புதிய மின் கம்பங்கள் நடப்பட்டு புதிதாக மின் கம்பிகள் இணைக்கப் பட்டுள்ளது.

மேலும் புதிய மின்மாற்றிகளும் இணைக்கப்பட்டு மின் விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது. (க-12)

## பெண் செய்தியாளரை காணவில்லை

(கொழும்பு)

''தீஜலன்ட்'' பத்திரிகையில் பெண் செய்தியாளரான சஞ்சீவி வியசூரியா (30 வயது) கடந்த 9 ஆம் திகதி முதல் காணவில்லை என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவர் குறித்த தகவல் ஏதும் தெரிந்தால் 621491 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

வடக்கு - கிழக்கு

# மாகாண மருத்துவ மனைகளில் பிரிட்டிஷ் நிபுணர்கள் சேவையில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள தள வைத்திய சாலைகளில் பிரிட்டனைச் சேர்ந்த 3 வைத்திய நிபுணர்கள் அடுத்த மாதம் முதல் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வடக்கு–கிழக்கு. நிலவரம் தொடர்பாக மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனாவை, இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் லிண்டா டபயட் அண்மையில் சந்தித்துப் பேசுகையிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

திருகோணமலை ஆளுநர் பணிமனையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது மாகாணசபை உயர்மட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிட த்தக்கது.

இதே வேளை வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிக்கென பிரிட்டன் அரசு வழங்கும் உதவிகள் வழமையை விட இவ்வருடம் கூடுதலாக இருக்குமெனக் கருதுவதாக மாகாண ஆளுநர் கருத்து வெளியிட்டுள்ளார். (க-8)

யாழ். செயலகத்தில்

## விளையாட்டு அதிகாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெற்றது

யாழ்.மாவட்டபிரதேசசெயலர் பிரிவுகள் தோறும் நிலவி வரும் விளையாட்டு அதிகாரிகள் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் விளையாட்டு அதிகாரிகள் யாழ்ப்பாணத்திலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை இதுவரை காலமும் தற்காலிக விளையாட்டு அதிகாரிகளாக கடைமையாற்றிவந்த 5பேரும் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

மேலும் நேற்று நடைபெற்ற இந்த நேர்முகப்பரீட்சையினை நடாத்துவதற்காக கொழும்பிலிருந்து விளையாட்டு உதவிப் பணிப்பாளர் கே. டபிள்யூ. விமலராஜன் யாழ்ப்பாணம் வந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-14)

இராணுவக் கட்டுப் பாடில்லாத

## ஈச்சிலம்பற்று பிரதேச செயலர் பிரிவு மருத்துவமனை இயங்க அனுமதியில்லை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் ஈச்சிலம்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரசினர் வைத்திய சாலையை இயங்கவைக்க முடியாதென வடக்கு-கிழக்கு சுகாதார அமைச்சு திட்டவட்டமாக அறிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி வைத்தியசாலை, 1990 காலப் பகுதியில் இடம்பெற்ற வன் செயல்களின் போது சேதமடைந்திருந்தது. பின்னர் வைத்தியசாலையை திருத்தும் வேலைகள் நடைபெற்று 6 மாதத்தின் பின் முடிவுற்றது.

திருத்தவேலைகள் முடிவுற்ற போதிலும் வைத்திய சாலையை திறந்து இயங்க வைப்பதற்குஅரசுஎந்தவொரு முயற்சியும் எடுக்கவில்லை. இதனை மக்கள் சம்பந்தப்பட்ட பகுதியினருக்குச் சுட்டிக்காட்டிய போது, இராணுவத்தின் கட்டுப்பாடில்லாத பகுதியில் அமைந்திருக்கும் இவ் வைத்திய சாலையை இயங்கவைக்க அனுமதிக்க முடியாதென தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மிகவும் மனமுடைந்த நிலையில் காணப்படும் மக்கள் சார்பில், இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இயங்கும் வைத்திய சாலைகளை அரசினால் இயங்கச் செய்ய முடியுமெனின் ஏன் மூதூர் பிரதேசத்தில் உள்ள அரசு வைத்திய சாலையை திறந்து இயங்க வைக்க முடியாது என சாரப்பட்ட கடிதம் ஒன்றை, சுகாதார அமைச்சர் நிமால் சிறீபால டி. சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை, மேற்படி பிரதேச செயலர் பிரிவில் 19 கிராமங்களைச் சேர்ந்த 10 ஆயிரம் மக்களில் 99 வீதமானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என்பது, வைத்திய சேவையைப் பெறுவதற்காக பல மைல் தூரம் கஷ்டப்பட்டு செல்ல வேண்டிய நிலையில் இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

## அதிகாரிகள் கவலை

(கல்வியங்காடு)

வன்னிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மீண்டும் யாழ். குடா நாட்டுப் பகுதியில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் பாய், வாளி, சவர்க்காரம் போன்றவற்றை உரியவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை என நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதிகாரிகள் இது சம்பந்தமாக உறுதிப்படுத்திய பின்பும் கூட இவர்கள் இவ்வாறு பொருட்களை பெற பின்னடிப்பது குறித்தே கவலை தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்காட்டி அன்பளிப்பு

(நெல்லியடி)

வடமராட்சி பனை தென்னை வள. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தனியின் ஊழியர் நலன்புரிச் சங்கம் கடந்த ஆண்டு இலகரமாக இயங்கியதை தொடர்ந்து தனது அங்கத்தவர்களுக்குஅதிஷ்ட லக்குமி நாட்காட்டியினைஅன்பளிப்பு செய்துள்ளது இச்சங்கத்தின் தலைவர் திரு.ஆ.சிவராசா அவர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது. (க–18)

## (இராசி பலன்)

25.01.2000
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு தை 11)

பஞ்சமி அதிகாலை 5 29 வரை, உத்தரம் வைகறை 2.47 வரை, சித்தயோகம் இராகு காலம் பகல் 2.39 முதல் 4.04 வரை, சுபநேரம் காலை 8.36 முதல் 10.06 வரை.

**மேடம்:**
குடும்ப மகிழ்ச்சி, தான தர்மம், தொழில் லாபம்.

**இடபம்:**
பழைய யோசனைகள், விரோதசிந்தை, கடன்சுமை.

**மிதுனம்:**
காரியத்தடை, இயலாமை, வீண்செலவு.

**கடகம்:**
கற்பனை மிகுதி, சுபகாரியம், பயணம்.

**சிங்கம்:**
முட்டிமோதல், தொழில் நஷ்டம், சகோதரர்பகை.

**கன்னி:**
இனிய நினைவுகள், மனைவி பாராட்டு, தெய்வ தரிசனம்.

**துலாம்:**
ஒதுங்கிப்போதல், அதிகாரிகள் வெறுப்பு,. சஞ்சலம்.

**விருச்சிகம்:**
காரியசித்தி, தொழில் முதலீடு, நண்பர் உதவி.

**தனுசு:**
பெரியோர் ஆசி, புதிய முயற்சி, நற்செய்தி.

**மகரம்:**
தந்திரோபாயம், வீண் விரோதம், தொழில் முடக்கம்.

**கும்பம்:**
குளப்பநிலை, பணியாளர் தொல்லை, மனச்சுமை.

**மீனம்:**
உயர்வு நிலை, பணப் புளக்கம், சாதனை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## இந்திய-இலங்கைசுதந்திரவர்த்தகஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்தாகும்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நீண்டகாலமாக கைச்சாத்திடப்படாமல் காலதாமதம் செய்யப்பட்டு வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அடுத்த மாதமளவில் கைச்சாத்திடப்படும் என உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையேயான மேற்படி சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் வருடமொன்றுக்கு 280 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை இந்தியாவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்யும்.

தற்போது 35 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை மாத்திரமே இந்தியாவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்கின்றது. என்று மேலும் அவ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-14)

## புத்தளம் நகரில் புதிய சரணாலயம் விரைவில் அமைக்கப்படவுள்ளது

**சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு**

(கொழும்பு)

உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை பெரிதும் கவரக்கூடிய வகையில் பறவைகளின் சரணாலையமொன்று புத்தளம் நகரில் அமைக்கப்படவுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

புத்தளம் நகர எல்லைக்குள் தில்லையடி என்னும் கிராமத்தின் இயற்கை எழில் மிகுந்த கடற்கரையோரத்தில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவில் இந்த சரணாலயத்தை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள வேடந்தாங்கல் பகுதியில் அமைக்கப்பட்டு பிரசித்திபெற்ற பறவைகளின் சரணாலயம் போன்று அமைக்கப்படவுள்ள இச் சரணாலய பகுதியில் சிறு சிறு தீவுகள் அமைந்துள்ளதால் அப்பகுதிகளெல்லாம் சரணாலயத்தை விஸ்தரிப்பதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் படகுகள்மூலம் அங்குசென்று பறவைகளை கண்டுகழிப்பதற்கான வாய்ப்புக்களும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சு இதன் மூலம் பெருந்தொகையானவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வசதிகள் ஏற்படுவதுடன் பெருந்தொகையான வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் கவர்ந்திழுப்பதுடன் உல்லாச பயணிகளின் வருகையையும் அதிகரிக்கச் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-14)

## தியாக ராஜனைப் புகழ்ந்திடுவாய்

ராகம்:- காம்போதி தாளம்:-ஆதி

**பல்லவி**

தியாக ராஜாவின் பெரும்புகழைப் பாடு - குரு
தியாக ராஜாவின் அரும்பதங்கள் சூடு - மனமே!
(தியாக......)

**அனுபல்லவி**

சீதாராமனைத் துதித்திடும் நேசனாம் - அருள்
தீனதயாளும் ராமனின் தாஸனாம் - ஞானி
(தியாக......)

**சரணம்**

ஜானகி ராமனின் அழகினிற் கலந்தான் - ரகு
ராஜா ராமனின் அன்பினில் நனைந்தான் - உயிர்
ஜானகி நாதனின் கருணையிற் கரைந்தான் - எழில்
ரவிகுலத் திலகனின் மகிமையில் அமிழ்ந்தான் - குரு
(தியாக......)

தன்னுடல் பொருளெலாம் ராமனேயென்றான் - தேடும்
தன்நலம் பலமெலாம் ராகவனென்றால் - சூடும்
தன்னுயிரத் துணையெலாம் ரவிகுலனென்றான் - பாடும்
தன்னுளத் தொலியெலாம் ராமன்தானென்றான் - ஐயன்
(தியாக......)

இன்னிசைப் பூக்களால் ராமனைப் புகழ்ந்தான் - நிதம்
பண்ணிசைப் பாக்களால் ராஜனைத் துதித்தான் - தினம்
தன்னுயர்ப் பாட்டினால் ராமனைப் பணிந்தான் - வளர்
தன்னுயிர்ப் பாக்களால் நாதனை இணைந்தான்
- அண்ணல்
(தியாக......)

சற்குருவாம் தியாக ராஜனைப் புகழ்ந்திடுவாய் - உயர்
நற்குருவாம் தியாக ராஜனைப் பணிந்திடுவாய் - வளர்
இசைவடிவாம் தியாக ராஜாவை ஏத்திடுவாய் - பெரும்
இசைப்பயனாம் தியாக ராஜாவைப் போற்றிடுவாய்
- ஐயன்
(தியாக......)

- முருகு

# செய்தித் துளிகள்

## தேவாலயம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

1995ம் ஆண்டு விமானத் தாக்குதலினால் சேதமடைந்த நவாலி சென், பீற்றர்ஸ் தேவாலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புச் செய்யப்பட்ட இத்தேவாலயம் அண்மையில் யாழ், மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களினால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் பெருந்திரளானமக்கள் கலந்துகொண்டு விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து நினைவு கூர்ந்தனர்.

இதேவேளை நேற்றைய தினம் 2000 யூபிலி ஆண்டை ஒட்டி தேவாலயத்தில் பங்கு மக்களால் மதிய போசனம் வழங்கப்பட்டது, (வ)

## அடிக்கல் நாட்டல்

(புலோலி)

வல்வெட்டித் துறை மரக்கறிச்சந்தையைப் புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு.எம். கே. சிவாஜிலிங்கம் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

(க-55)

## பொறுப்பாளர் இடமாற்றம்

(மந்திகை)

வடமராட்சி தெற்குமேற்கு பிரதேச சபை உடுப்பிட்டி உப அலுவலக பொறுப்பதிகாரி சவரிமுத்து அன்ரன் கிறைஸ் கட்டைவேலி உப அலுவலகத்திற்கு இடம்மாற்றப் பட்டுள்ளார்.

(க-23)

## உதவி மதுவரி ஆணையாளர் நியமனம்

(நெல்லியடி)

வட பிராந்தியம் ஒன்றின் புதிய உதவி மதுவரி ஆணையாளராக ந. சிறிகாந்தா மதுவரி ஆணையாளர் நாயகம் திரு. பத்துவ விஜயரட்ண வினால் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைகளை கடந்த 19 ஆம் திகதி புதனன்று பொறுப்பேற்றுக் கொண்டார். முன்னர் இவர் கிழக்குப் பிராந்திய உதவிமதுவரி ஆணையாளராக கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## சான்றிதழ்கள் பெறலாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ், 1998 ஆம் கல்வி ஆண்டில் தமிழ் தட்டெழுத்து -சுருக்கெழுத்து பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்கள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கல்லூரி அதிபர் கே. சந்திரசேகரா தெரிவித்துள்ளார்.

(க-21)

## சிரமதானப் பணி

(யாழ்ப்பாணம்)

சிவகுருநாத பீடம் வேதாந்தமண்டபத்தில் யாழ் பரியோவான் கல்லூரி சாரண மாணவர்களால் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. சாரண தலைவரான சு. சசிகுமார் தலைமையில் இப்பணி சிறப்புடன் செய்யப்பட்டது.

(க)

## புதிய பஸ்சேவை

(வரணி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் சேவை காலை 6.00மணிக்கு கொடிகாமத்தில் இருந்து769 வீதிமார்க்கமாகநடைபெற்று வருகிறது.

இதுவே கொடிகாமத்தில் இருந்து புறப்படும் முதல் பஸ் ஆகும் .இது இரவில் கொடிகாமம் கிராமிய வங்கி வளவிலேயே தரித்து நின்று தனது சேவையில் ஈடுபட்டு வருகின்றது. (க-20)

## புதிய படகு சேவை

(தீவகம்)

நயினாதீவில் இருக்கும் மக்களின் போக்குவரத்து நன்மையினைக் கருத்தில் கொண்டு அடுத்த மாதம் முதல் காலை 7.30 மணிக்கு நயினாதீவு இறங்குதுறையில் இருந்து குறிகட்டுவான் இறங்குதுறைக்கு புதிய படகு சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளையில் அரசுக்கு சொந்தமான படகினை சேவைக்கு அமர்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (க)

## படிப்பகம் அமைத்தல்

(இணுவில்)

இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்துடன் இணைந்த படிப்பக, கட்டடத்தொகுதி, சனசமூக நிலையத்தினரால் கிராம மக்களினதும்இளைஞர்களினதும் நிதிஉதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது.

(க-49.)

## பணப் பரிசுகள் வழங்கப்பட்டன

(மந்திகை)

துன்னாலை காசிநாதர் வித்தியாலைய 5ம் ஆண்டு புலமைபரீட்சையில் சித்தியடைந்த 5மாணவர்களுக்கு பட்டயக் கணக்காளர் எ.சோமசுந்தரம்பிள்ளை பணப் பரிசுகள் வழங்கி மாணவர்களை கௌரவித்துள்ளார். (க-23)

## தண்ணீர் பவுசர் அன்பளிப்பு

(கரணவாய்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வாதரவத்தை கிராமத்திற்கு தண்ணீர் விநியோகிக்கும் பொருட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் தண்ணீர் பவுஸர் ஒன்றும் லான்மாஸ்டர் ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இப் பொருள்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர்பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம்கடந்த21 ஆம் திகதிதலைமைக்காரியாலயத்தில்வைத்து பிரதேச சபைத் தலைவரிடம் கையளித்தார் (க-27)

## வீடு கொள்வனவு

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பணிமனைக்காக யாழ். தட்டாதெரு சந்திக்கு சமீபமாக வீடு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது தற்பொழுது வைமன் வீதியில் இயங்கிவரும் இப்பணிமனையின் செயற்பாடுகள் எதிர்வரும் பங்குனி மாதம் முதல் இப்புதியகட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-78)

---

தெல்லிப்பழை

# புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீளவும் திறக்குமாறு கோரிக்கை

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் தொகை அதிகரித்து வருவதால் தெல்லிப்பழையில் இயங்காத நிலையில் இருக்கும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை விரைவில் திறப்பதற்கான முயற்சிகளை உடன் மேற்கொள்ள வேண்டும். என யாழ்ப்பாண வைத்தியர்களும் சமூகநலன் விரும்பிகளும் அரசு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத்தெரிய வந்துள்ளது.

இதுபற்றி மேலும் அறியப்படுவதாவது புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்கள் மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்படுவதால் பல்வேறு விதமான கஸ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் பெரும் தொகையான பணத்தையும் செலவிடவேண்டியுள்ளது.

இதேவேளை வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றவர்கள் பெரும் தொகையான பணத்தைச் செலவிட்டு மகரகமவுக்குச் செல்ல முடியாதவர்களாகவும் இருக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த ''கோபல்'' இயந்திரம் தற்போது காலியிலுள்ள வைத்திய சாலையில் பாவிக்கப்பட்டு வருவதாகவும் அறியப்படுகின்றது.

மேலும் இவ் வைத்திய சாலையைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள சுகாதார வைத்திய உயர் அதிகாரிகள் பாதுகாப்புப் படையினருடன் கலந்தாலோசித்ததாகவும் தெரியவந்துள்வது.

(க- 77)

# மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் சோதனை நடவடிக்கைகள் தீவிரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பொலநறுவை வீதியில் பாதுகாப்பு தொடர்பாக விஷேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து பொலநறுவையூடாக மட்டக்களப்புக்கு வரும் சகல வாகனங்களும் வெலிகந்தையில் நிறுத்தப்படுகின்றன.

படையினரின் வீதிப்பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு போக்குவரத்து அனுமதி வழங்கப்பட்ட பின்பே வாகனங்கள் மட்டக்களப்பு நோக்கி செல்ல அனுமதிக்கப்படுகிறன.

மட்ட.க்களப்பு பொலநறுவை வீதியில்கடந்த வாரம் பயணிகள் பஸ் மற்றும் இரு எரிபொருள் பவுஸர் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்தே இந் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பயணிகள் உட்பட அனைத்து வாகனங்களும் காலை 8 மணிக்குப் பின்பே செல்ல அனுமதிக்கப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (க-60)

# உள்ளூர் மூலப்பொருளை பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்

## பிராந்திய ஆணையாளர் தெரிவிப்பு

(ஊர்காவற்றுறை)

உள்ளூர் மூலப்பொருட்களை பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் எமது இளைஞர் யுவதிகள் அனைவரும் சுயதொழில் முயற்சியினை மேற்கொள்ளமுடியும் என வடக்கு-கிழக்கு மாகாணப் பிராந்திய ஆணையாளர் ஏ. சி. செபநாதன் தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெற்ற தையல் பயிற்சிநெறிக் கண்காட்சி நிகழ்வு அண்மையில் புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அவர் மேலும்தனது உரையில்

கிராமத்தின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஆற்றுப்படுத்தலாளர்களான உதவி அரசாங்க அதிபர்கள் திட்டமிடல் பணிப்பாளர்கள் ஆகியோர் வழிநடத்தலில் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு கிராம அபிவிருத்திக்குப் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, யாழ். செயலகப் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் கா. பாலகிருஷ்ணன் வேலணை உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(க-75)

## யாழ்.மாநகர வீதி சீர்கேடுகள் பற்றி

# யுனிசெப் திட்டமிடல் அதிகாரியிடம் ஆணையாளர் பாலசிங்கம் முறையீடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக் குட்பட்டிருக்கும் வீதிகளின் பரிதாபகரமான நிலைகள் பற்றிஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு எடுத்துக்கூறும்படி யாழ்ப்பான மாநகரசபையின் ஆணையாளர்திரு.வே.பொ. பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் இயங்கிவருகின்ற யுனிசெப் நிறுவனத்தின் திட்டமிடல் அதிகாரியான திருமதி. பெனிபுறூனிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் இதுபற்றி அங்கு மேலும் குறிப்பிடுகையில். யாழ்ப்பாண மாநகரசபையின் உட்கட்டுமானப் பணிகளுள் மிகவும் முக்கியமானது வீதிகளாகும். இவற்றினைத் திருத்தம்செய்வதற்கு போதிய வளங்கள் இல்லாமல்இருப்பது கவலைக் குரியதாகும் என்றார். (க-77)

# சுண்டுக்குளியில் திருட்டு முயற்சி தோல்வியில் முடிவடைந்தது

(இளவாலை)

சுண்டுக்குளி பகுதியில் உள்ள சோமசுந்தரம் வீதியில் அண்மையில் இரு வீடுகளில் கள்வர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இருவீடுகளில் இருந்தும் பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி மின்சார அழுத்திப் பெட்டி வானொலிப்பெட்டி என்பன திருடப்பட்டுள்ளதாகவும் வீட்டுக்காரர் இடையில் விழித்துக் கொண்டதாலேயே வேறு பெறுமதியான பொருட்களைத் திருடமுடியாது இடையில் கள்வர் தப்பி ஓடிவிட்டதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## மரமுந்திரிகை கன்றுகள் விநியோகம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையினரால் திருநெல்வேலி பகுதி மக்களுக்கு மரமுந்திரிகை கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளின் நன்மை கருதியே இவ் விநியோகம் இடம் பெற்று வருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-76)

## சங்கிலியன் வீதி திருத்த வேலை

(கல்வியங்காடு)

நிண்டகாலமாக திருத்தப்படாமையால் குன்றும் குழியுமாகக் காணப்பட்ட நல்லூர் சங்கிலியன் வீதியை யாழ்.மாநகர சபையின்அனுசரணையுடன் திருத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது. (க-54)

## ஒப்பமிடல்

(கல்வியங்காடு)

அண்மையில் சமுர்த்தி முகவர்களாக நியமனம் பெற்ற உத்தியோகத்தர்கள் இனி மேல் தமது வருகையை உறுதிப்படுத்தும் ஒப்பத்தினை தமது பகுதி சமுர்த்தி முகவர் காரியாலயத்திலேயே இடலாம் என சம்பந்தப்பட்ட திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும்சமுர்த்தி முகவர்கள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கையொப்பம் இட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-54)

## நிர்வாகிகள் தெரிவு

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு கிராம சேவகர் பிரிவுக்கான இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் மன்றத்தில் இடம்பெற்றது.

இத்தெரிவில் தலைவராக மு.சிவப்பிரகாசம், செயலாளராக வி.ஐங்கரன்பொருளாளராக க.அருமைதாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-14)

# புதிய அரசியல் யாப்பு சமர்ப்பித்தால் எமது ஆதரவு நிச்சயம் உண்டு

## - ஈ. பி. ஆர். எல். எவ். தெரிவிப்பு

(கொழும்பு)

இனபிரச்சினை தீர்வுக்கான புதிய அரசியல் யாப்பானது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அது விடயத்தில் நாம் எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்பதை பகிரங்கமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். மத்திய செயற் குழுவின் சார்பாக ஆ. வரதராஜப் பெருமாள், ந. சுபத்திரன், தி. சிறிதரன் ஆகியோர் கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

பொதுஜனமுன்னணி அரசாங்கத்தினது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் வாக்களிக்கத் தயாரென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கூறியிருப்பதை நாம் வரவேற்கிறோம்.

இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியற் தீர்வினை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான பிரதான கட்டத்தை இந்நாடு அடைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

பாரம்பரியமாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காணும் விடயத்தில் இரு துருவங்களாகச் செயற்பட்டு வந்த கட்சிகள் மத்தியில் 50 வருடங்களுக்குப் பின் நம்பிக்கை தரக்கூடிய இத்தகைய தொரு தோற்பாடு ஏற்பட்டிருக்கின்றமையானது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இனிமேலும் காலம் தாமதிக்காமல். ஜனாதிபதி திருமதி சந்திரிகா அவர்களின் தலைமையிலான பொதுஜன முன்னணி அரசாங்கம் தாங்கள் முன்வைத்த தீர்வுத்திட்ட யோசனைகளை உடனடியாக உரிய திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

புதிய நூற்றாண்டில் கொலைகள் வன்முறைகள் மத்தியில் அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் நம்பிக்கை ஏற்படுவதாக அமைகிறது.

இந்த நாட்டின் பெரும்பான்மையான தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் இனப் பிரச்சனைக்கான அரசியற் தீர்வு, இனங்களுக்கிடையில் சமாதான வாழ்வு இரண்டையுமே வலியுறுத்தினார்கள்.

ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா அவர்களுக்கு வாக்களித்த 42 இலட்சம் மக்களும், ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு வாக்களித்த 36 லட்சம் மக்களும் வெவ்வேறு கோணங்களில் இதனைத் தான் வலியுறுத்தினார்கள்.

எனவே மக்களின் நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் வீண் போகாத வகையில் காலதாமதமின்றிச் செயற்படும்படி அரசின் தலைவரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் இந்த நாட்டு மக்களின் சார்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்பார்க்கப்படும் புதிய அரசியல்யாப்பானதுபாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நாம் எமது பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்குவோம் என்பதையும் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மாணவர்களின் வாசிப்புபழக்கத்தைதூண்ட புதிய செயற்றிட்டம் அமுலாகிறது

(தீவகம்)

தீவகக் கல்விவலயத்திலுள்ள ஊர்காவற்றுறை சென் அன்ரனிஸ் கல்லூரியில் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை தூண்டும் வகையிலும், மாணவர்கள் பொது விடயங்களை அறிந்து கொள்ளும் நோக்கிலும் அனைத்து மாணவர்களையும் ஒன்று கூட்டி அன்றன்று வெளிவருகின்ற தினசரிப் பத்திரிகைகளில் இடம்பெற்றுள்ள செய்திகளை அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பத்திரிகைக் கண்ணோட்டத்தில், வலம்புரி, உதயன். தினக்குரல். ஆகிய பத்திரிகைகளின் முக்கிய செய்திகள் மற்றும் ஆசிரியத் தலையங்கம் என்பன இடம்பெற்று வருகிறது.

பாடசாலை நிர்வாகத்தினரின் இந்த முயற்சிக்கு சகல தரப்பில் இருந்தும். ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. (சு)

# கரையோர நாடுகளிற்கிடையிலான அமைச்சர்களின் 2நாள்கூட்டம் ஓமானில்

(கொழும்பு)

இந்துசமுந்திரக் கரையோர நாடுகளுக்கிடையேயான சுதந்திரமான வர்த்தக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் அமைச்சர்களின் இரண்டு நாள் கூட்டம் நேற்று முன்தினம் ஓமானில் ஆரம்பமானது.

பிராந்திய ஒத்துழைப்பை நோக்காகக் கொண்ட இந்து சமுத்திரக்கரையோர நாடுகளிற்கிடையேயான அமைப்பில் புதிதாக பங்களாதேஷ், ஈரான், சிசில், தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய ஐந்து நாடுகள் இணைந்து கொண்டுள்ளதை வரவேற்கும் முகமாகவும் இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென ஓமான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இவ்வமைப்பில் ஏற்கனவே அவுஸ்திரேலியா, இந்தியா, இந்தோனேசியா, கென்யா, மடகஸ்கார், மலேசியா, மொறிசியஸ், மொசாம்பிக், ஓமான், சிங்கப்பூர், இலங்கை, தென்னாபிரிக்கா, தன்சானியா ஆகிய நாடுகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத் தக்கது. (க-9)

# எமது பிரதேச மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து உழைக்கவேண்டும்

## யா.மா.கூ.அ.உ ஆணையர்தெரிவிப்பு

(நெடுந்தீவு)

இந்த புத்தாயிரமாம் ஆண்டிலே எமது பிரதேச மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து உழைக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் கூட்டுறவாளர் என்ற இலக்கை நோக்கி முன்னேற வேண்டும். வருங்கால தேவைகளை நிறைவு செய்ய வழி சமைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செ. கு. சண்முகநாதன் புத்தாயிரமாம் ஆண்டின் தலைவர்/பொது முகாமையாளருக்கான முதலாவது மகாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.

யாழ். மாவட்டத்தின் பல. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள்/பொது முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள், உதவி கூட்டுறவு ஆணையாளர்கள், மற்றும் கூட்டுறவுச் சபை பிரதிநிதிகள் மத்தியில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போதும் ''பழைய கசப்பானவைகளை மறந்து புதிய உத்வேகத்துடன் திணைக்களத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்'' என்றும் கேட்டுக் கொண்டார். (க)

## இடதுபக்கம்

# சாரதி ஆசன வாகன இறக்குமதிக்கு இலங்கை அரசு தடையுத்தரவு

(கொழும்பு)

இடது பக்கமாக சாரதி ஆசனமுள்ள வாகனங்களை இலங்கைக்கு தருவிப்பதை தடை செய்யும் சட்டம் கொண்டுவர போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் இடதுபக்கமாக சாரதி ஆசனமுள்ள வாகனங்களுக்கு இடமளிப்பதால் ஏனைய வாகனங்களுக்கும் உயிர்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்தைக் கருத்திற் கொண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது இந்த தடைச்சட்டம் கடுமையாக அமுல் படுத்தப்படவுள்ளது.

இதேவேளை தற்போது பாவனையில் உள்ளஇவ்வகையான வாகனங்கள் /அரசசட்டங்களை மீறி செயற்படும் பட்சத்தில் அவை அரச உடமையாக்கப் படுவதோடு தண்டனையும் வழங்கப் படும் என்று வாகனப்பதிவு ஆணையாளர் அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-14)

## கால்கோள் விழா

(கோப்பாய்)

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன்பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில், முதலாம் தர ஆசிரியையான செல்விமா. டயனிஸ்வரி தலைமையில் நடைபெற்றது. (க-5)

# சுதந்திர தினத்தை கொண்டாட யாழ். செயலகத்திற்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் மாசி மாதம் 4ம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின கொண்டாட்டங்களை வைபவரீதியாக அன்றைய தினம் கொண்டாடும்படி யாழ் செயலகத்திற்கும் அதன் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சினால் விடப்பட்டுள்ள மேற்படி வேண்டுகோளில் 'நாட்டின் யுத்தநிலை மிகமோசமான நிலையில் காணப்படுவதனால் நாட்டில் அமைதியைக் கடைப்பிடிக்கும் வகையில் வைபவரீதியாக மிகவும் எளிமையாக கொண்டாடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இது சம்பந்தமான அறிவித்தல்கள் யாழ் செயலகத்திற்கு பொது நிர்வாக அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-14)

## யுனிசெவ் உதவியுடன்

# பெண்களை போற்றி வளர்ப்பீர் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன

(அச்சுவேலி)

யுனிசெவ் உதவியுடன் யாழ். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுவரொட்டி வெளியிடும் திட்டத்தின் கீழ் 'பெண்களைப் போற்றிவளர்ப்பீர்' என்னும் தலைப்பிலான 4 வது சுவரொட்டி வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார பணிமனை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர்.

எனவே சுகாதார சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிறுவனங்கள் சுகாதார வைத்திய பணிமனையில் உள்ள நகர்ப்புற அடிப்படை நிகழ்ச்சித் திட்டப் பகுதியுடன் தொடர்பு கொண்டு இவற்றை பெற்றுக் கொள்ளலாம் எனவும் சுகாதார பணிமனை வட்டாரத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (க-14)

## யாழ் கல்விவலய

# முறை சாரா பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கல்விவலய முறைசாரக் கல்விப் பிரிவின் பயிற்சித்திட்டத்தின் கீழ் இவ் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ், ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து, வானொலி பேணல், வீட்டு மின்னிணைப்பு, உடையமைத்தல், தலையலங்காரம், மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல், குளிரூட்டலும் காற்றுச் சீராக்கலும் போன்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். வலய கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகளில் பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை நேரடியாகவோ, கடிதமூலமோ அல்லது தாம் கல்விகற்ற பாடசாலைகளின் ஊடாகவோ அனுப்பிவைக்க முடியும் என்று தெரிவித்துள்ள அவர் இப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர் வரும் மாசிமாதம் 15 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படும் என்றும் தெரிவித்துள்ளார். (க-14)

## கவிஞர் நீலாவணன் நினைவு பேருரை

(மட்டக்களப்பு)

கிழக்கின் புகழ் பெற்ற கவிஞரான நீலாவணன் நினைவுப் பேருரை மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திங்கள் காலை நடைபெற்றது.

இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் முருகு. தயானந்தா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈழத்து வாய் மொழிப் பாடல் பாரம்பரியம் எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. யோகராசா சிறப்புரை நிகழ்த்தினார். (க-60)

## விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்கு

(அல்லைப்பிட்டி)

ஊர்காவற்றுறை பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பாட மேம்பாடு பற்றியவிழிப்புணர்வுக்கருத்தரங்கொன்று மெலிஞ்சி முனை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஊர்காவற்றுறை பங்குத் தந்தையின் தலைமையில் பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்த வேண்டும். என்ற தொனிப் பொருளில் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது.

இதில் மேற்படி பாடசாலை அதிபர் திரு. வீ.ஏ. சிவராசா தீவக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் மற்றும் யாழ். குடாநாட்டின் கல்விமான்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-46)

## படிவங்கள் வழங்கல்

(கல்வியங்காடு)

அரச உத்தியோகத்தர்களுக்கு மாகாணசபையில் அல்லது மத்தியஅரசில் வேலை செய்யும் விரும்பிகள். தெரிவிக்கும். விண்ணப்பம் தற்போது யாழ். செயலகத்தில் வழங்கப்படுகின்றது.

பூர்த்திசெய்த விண்ணப்பங்கள் இம்மாத இறுதிக்குள் ஒப்படைக்கப்பட வேண்டும் என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (க-54)

## நிர்வாகிகள் தெரிவு

(தொண்டமனாறு)

தொண்டமனாறு கலையரசி சனசமூக நிலையத்தின் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது.

இந் நிகழ்வில், தலைவர் க. பிரபாகரன் உபதலைவர் ப. தயாளதாசன் செயலாளர் கா. அருந்தவராசா உபசெயலாளர் மா. தம்பித்துரை பொருளாளர் அ. தவரூபன் கணக்குப் பரிசோதகர் தே. முரளிதரன் போஷகர் செ. சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-7)

வானோக்கி வாழும்
உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி
- குறள்

# வலம்புரி

## மௌனம் கலைந்தது

நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு சமாதானமே. அரசியல் சதுரங்கத்தில் யார் வென்றாலென்ன தோற்றாலென்ன எங்களை பிறந்த மண்ணிலே நிம்மதியாக வாழவிடுங்கள் என்ற ஏகோபித்த குரல் கேட்டோ என்னவோ எதிர்க் கட்சித் தலைவரின் மௌனம் கலைந்திருக்கிறது. ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலைமாற வேண்டும். பேச்சிலே மட்டுமன்றி கறுப்பிலும் வெள்ளையிலுமல்லவா உறுதி மொழிவந்திருக்கிறது.

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிராது நாட்டுக்குகந்த நல்லுனவற்றைச் செய்ய இதய சுத்தியோடு யாரும் முன்வரவேண்டும். இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும் என்ற வாய்மொழிக் கருத்தைச் செயலில் காட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது காலத்தின் தேவையே.

''மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாததாலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதிருக்கிறது. இந்த பெரும்பான்மையை ஐ. தே. க. தருவதில்லை. எனவேதான் பிரச்சினை நீடிக்கிறது. யுத்தமும் தொடர்கிறது என்று இனியும் நீங்கள் எங்கள் மீது பழிசுமத்த வேண்டாம். உங்கள் தீர்வு யோசனைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு முடிவுகட்டிவிடலாம் என்றால் நிச்சயம் நாங்கள் பாராளுமன்றத்தில் வேண்டிய ஆதரவை தருவதற்கு தயாராகவே உள்ளோம்'' என்பது ரணிலின் எழுத்து மூல உறுதி மொழி.

எனவே இப்பொழுது பந்து அம்மையார் பக்கம் இருக்கிறது. பேரினவாதத் தீயில் நாடு பற்றி எரியாமல் நாட்டு மக்கள் அவாவி நிற்கும் வினாவிற்கு விடைகாண்பதே விவேகமானதாகும். நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகமில்லை என்பார்கள். எண்ணித் துணிகின்ற காரியம் நிறைவேறாது போகாது. மேற்குலக நாடுகளில் புரை போடிப் போன எத்தனையோ பிரச்சினைகள் சமாதானமாகத் தீர்க்கப்பட்டிருக்கின்றன. பஞ்சசீலம் போதித்த போதிசத்துவனின் மண்ணில் நெஞ்சார நினைத்தால் முடியாததொன்றில்லை.

- அன்புடன் ஆசிரியர்

# பொதுத் தேர்தலை எதிர்கொள்ள தயாராகும் அரசியல் கட்சிகள்

(கொழும்பு)

வரும் ஆடி மாதத்தில் நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் இடம்பெறலாமென அறிவிக்கப்பட்டநிலையில், முக்கியமான அரசியல் கட்சிகள் பலவும் தேர்தலுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகையில், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் தொகுதிதோறும் சென்று, ஜனாதிபதித் தேர்தல்காலத்தின் முன்பும்பின்பும் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களை பார்வையிட்டு வருவதுடன், சேதவிபரங்களை அறிந்து வருவதாக தெரியவருகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. பாராளுமன்ற தேர்தலை வெற்றியுடன் எதிர்கொள்வதற்கான ஒரு யுக்தியேயென அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழ்க்கட்சிகள் பலவும் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் வகையில் தமது செயற்பாடுகளை பலகோணங்களிலும் ஆரம்பித்திருப்பதும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இதேவேளை நாடாளுமன்றத்தில் புதிய தேர்தல் சீரமைப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமானால், அங்கு விகிதாசார முறை பேணப்படும் வேளை தனிமனிதருக்கான முக்கியத்துவமும் வழங்கப்படலாம் எனக்கருதி, இவ் அரசியல்கட்சிகளின் ஆதரவாளர்களும் தேர்தலுக்கு முகம்கொடுக்கும் வகையில் தம்மைத் தயார்படுத்தி வருகிறார்கள். (க-9)

## பெண்காயம்

(ஈச்சமோட்டை)

யாழ். கரையோரத்தை அண்டிய பகுதிகளான பாஷையூர்அரியாலைப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

நேற்று முன்தினம் இரவு 7.30மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் புது வீதி பாஷையூரைச் சேர்ந்த எஸ்கலான் செபமாலைம்மா (வயது 46) என்னும் குடும்பப் பெண்ணே தொடையில் காயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (க-59)

## பாணுக்குள் கசிப்பு கொண்டு சென்றவர் வகையாக மாட்டிக் கொண்டார்

(கோப்பாய்)

உரும்பிராய், யோகபுரம் பகுதியில் கசிப்பு விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல் ஆகிய செயற்பாடுகளுக்கு, அப்பகுதிப் பொதுசன அமைப்புக்கள் முற்றாகத் தடை செய்துள்ளன.

ஆனால் இவர்கள் கண்ணில் மண்ணைத்தூவி பாணுக்குள் கசிப்பைக் கடத்திய நபர் இவர்களிடம் பிடிபட்டார்.

பாணை உட்புறமாகக் குடைந்து அதனுள் கசிப்புப் போத்தலை வைத்து, பாண் துண்டுகளால் மூடிக்கொண்டு சென்றுள்ளார் எனத்தெரிய வருகிறது. (க-5)

## இடம் மாற்றம்

(ஈச்சமோட்டை)

பாஷையூர் பகுதியின் பதற்ற சூழ்நிலை காரணமாக பாஷையூர் புனித அந்தோனியார் பாலர் பாடசாலை தற்காலிகமாக இடமாற்றப்பட்டு ஈச்சமோட்டை ஆரம்பப்பாட சாலையின்கட்டடப் பகுதியில் இயங்குகின்றது. [க-59]

## நெல் அறுவடை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றுப் பகுதியில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

ஒரு கிலோ 12 ரூபா 50 சதமாக மொத்தவியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படுகிறது. இவ் அறுவடை பெப்ரவரி இறுதிவரை நடைபெறும்.

இதனால் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ளனர். (க-4-60)

மியான்மாரில்

# வைத்தியசாலை ஒன்றின் உள்ளே பணயக் கைதிகளாக 500 பேர்

(லண்டன்)

மியான்மார் எல்லையிலுள்ள தமது தளங்கள் மீது தாக்குதல் நடாத்துவதை தாய்லாந்து இராணுவத்தினர் நிறுத்த வேண்டுமெனக் கோரி வைத்தியசாலை ஒன்றில் ஐந்நூறு பொது மக்கள் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடவுளின் சேனை என தம்மை கூறிக்கொள்ளும் குழுவினரே இவ்வாறு பணயக் கைதிகளை பிடித்து வைத்துள்ளனர்.

இதை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியதுடன், கடவுளின் சேனை எனும் குழுவின் கோரிக்கைக்கு தாம் இணங்கி மியான்மார் எல்லையிலுள்ள அவர்கள் தளங்கள் மீது தாக்குதல் தொடுப்பதில்லை என அறிவித்துவிட்டதாக தகவல் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடவுளின் சேனை என்ற இக்குழுவுக்கு (12 வயது) இரட்டையர் தலைமை தாங்குவது குறிப்பிடத்தக்கது. (க-9)

## பெண்களுக்கு இட ஒதுக்கீடு

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டசபைகளில்உள்ள ஆசனங்களில மூன்றில் ஒரு பகுதியை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்வது தொடர்பான சட்டமூலத்தை எவ்வித மாற்றமும் இன்றி கொண்டு வரப்போவதாக சட்டத்துறை அமைச்சர் ராம் ஜெத்மலானி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்

பெண்கள் இடஒதுக்கீடு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதையிட்டு நாம் உறுதியாக இருக்கின்றோம். எமது அனைத்து பலத்தையும் பிரயோகித்து இதை நிறைவேற்ற முயற்சி செய்வோம் என்றார்.

பிலிப்பைன்ஸில்

## தீவிரவாதிகள்-படையினர் மோதல் நான்கு பேர் படுகாயமடைந்தனர்

(ஸம்போன்கா)

பிலிப்பைன்ஸில் முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தரப்பினருக்கும் இடையில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் பிற்போடப்பட்டமையையடுத்து இருதரப்பினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 3பிரிவினை வாதிகளும் படைவீரரும் படுகாயமடைந்தனர்.

மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணியைச்சேர்ந்த பிரிவினைவாதிகள் சுமிசப் நகருக்கு அருகில் உள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலை அடுத்தே மேற்படி மோதல் வெடித்ததாக தெரியவருகிறது. இதேவேளை தமது வசமிருக்கும் பகுதிகளில் இராணுவம் பிரவேசிக்கமாட்டாது என்ற உடன்படிக்கையை அரசு மீறிவிட்டதாகவும் பேச்சுவார்த்தைகள் ஒத்திப்போடப்பட்டது குறித்தும் மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி பிலிப்பைன்ஸ் அரசை குறை கூறியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## இஸ்ரேலிய - சிரிய சமாதானப் பேச்சுக்கு எந்த முன்நிபந்தனையும் ஏற்கமுடியாது - ஜெபுல்பரத்

(புதுடில்லி)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவதற்கு முன்னால்'ஹோலான்குன்று' பகுதியை ஒப்படைப்பதாக இஸ்ரேல் வாக்குறுதி தர வேண்டும் என்ற சிரியாவின் கோரிக்கையை இஸ்ரேல் நிராகரித்து விட்டது.

எந்தவித முன் நிபந்தனையையும் இஸ்ரேல் ஏற்காது என்று பிரதமர் 'ஜெபுல் பரத்' கூறியதாக அவரது நெருங்கிய உதவியாளரை மேற்கோள் காட்டி இஸ்ரேல் வானொலி அறிவித்துள்ளது.

சிரியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையே அமெரிக்காவில் நடைபெறுவதாக இருந்த 3 வது சுற்றுப் போட்டி நடைபெறவில்லை என்றும் தெரியவருகிறது.

1967 இல் சிரியாவிற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நடைபெற்ற போரில் சிரியாவிடம் இருந்து இஸ்ரேஸ் கைப்பற்றிய 'ஹோலான் குன்றுகளை' விட்டு வெளியேறி விடுமாறு இஸ்ரேலை சிரியா நெருக்கி வருவதாகவும்.

இதனிடையே சமாதானப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டிருந்த போதும் விரைவிலேயே ஆரம்பிக்கப் படுமென்று அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிங்டன் கூறியதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (க-5)

இந்திய குடியரசுத்தின

## இராணுவ அணிவகுப்பு ஒத்திகையில் சக்திவாய்ந்த கைக்குண்டு மீட்பு

(புதுடில்லி)

புதன்கிழமை நடைபெறவுள்ள இந்திய குடியரசுதின இராணுவ அணிவகுப்பைச் சீர்குலைக்க, முஸ்லிம் தீவிரவாதிகள் மேற்கொண்ட சதி முயற்சி இந்தியப் பொலிஸாரால் நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டது.

நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள குடியரசு தினத்தை ஒட்டி இராணுவ அணிவகுப்பு ஒத்திகை ஒன்றினை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அணிவகுப்பு ஒத்திகை நடாத்தவிருந்த இடத்தில் மிகவும் எளிமையான பாதுகாப்பு ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனைப் பயன்படுத்தி உள்நுழைந்த முஸ்லிம் தீவிரவாதிகள், ஒத்திகை ஆரம்பமாகி 2 மணி நேரத்தின் பின் வெடிக்கக்கூடிய வகையில் குண்டொன்றினை வைத்திருந்தனர்.

ஆனாலும் தெய்வாதீனமாக ஒத்திகை ஆரம்பமாவதற்கு அரைமணி நேரத்திற்கு முன்பே அக் குண்டை பொலிஸார் மீட்டெடுத்ததால் ஏற்படவிருந்த பல்லாயிரக்கணக்கான உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை குடியரசு தின நிகழ்வை தடை செய்யும் பொருட்டு கார்கில் பகுதி எல்லைக்கோட்டைத்தாண்டி உள் நுழைந்து தாக்குதல் தொடுத்த பாகிஸ்தானிய இராணுவத்தின் முயற்சி அண்மையில் இந்திய இராணுவத்தால் முறியடிக்கப்பட்டமையும் தெரிந்ததே. (க-09)

## 5 பேர் பலி

(நோர்வே)

நோர்வேயில் பிரதான சாலை ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் வண்டியொன்று பனிக்கட்டியில் சறுக்குண்டு பள்ளத்தில் வீழ்ந்ததில் 5 பேர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளனர்: 20மீற்றர்பள்ளத்தில் வீழ்ந்த இப் பஸ் வண்டியிலிருந்து 2 பேர் உயிருடன் மீட்கப்பட்ட போதிலும் பயணம் செய்தவர்களின்சரியானஎண்ணிக்கை தெரியவரவில்லை. (க-14)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை

# மாணவர்களுக்கான சீசன் ரிக்கெற்

# கட்டணச் சலுகை மேலும் குறைப்பு

## அடுத்த மாதம் முதல் 10 வீதம் மட்டும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்களில் மேலும் கட்டணக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது இதுவரைகாலமும் வழங்கப்பட்ட 80முதல் 85வீத கட்டணச் சலுகையில் மாற்றம் செய்யப்பட்டு ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வயது வேறுபாடின்றி 21வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 90வீத கட்டணச் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இந்த கட்டணக் குறைப்பு தொடர்பான சுற்றறிக்கை ஒன்று போக்குவரத்து அமைச்சினால் நேற்றுமாலை வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது

முன்னர் 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு முழுக்கட்டணத்தில் 85வீத சலுகையும், 12 முதல் 21வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 80 வீதம் கட்டணச் சலுகையும் வழங்கப்பட்டுவந்தது. புதிய தீர்மானத்தின்படி 21 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் பயணம் செய்யும் முழுக் கட்டணத்தில் 90வீத சலுகை வழங்கப்படவுள்ளது.

'குடாநாட்டில் இன்றைய நிலை காரணமாகப் பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புக்குள்ளான எம்மக்களுக்கு இச்சலுகை ஒரு பெரும் வரப்பிரசாதமாகும் என்றும், இந்த அறிவுறுத்தல் நேற்று மாலை கிடைத்தமையால் வழமையாக 26ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படும் மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டுக்கள் இம்முறை புதிய கட்டணச் சலுகைகளுடன் இம்மாதம் 28ஆம் திகதி முதல் எதிர்வரும் 07ஆம் திகதிவரை விநியோகிக்கப்படும் என்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வீ. எஸ்- சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருத்தப்பட்ட கட்டண விபரம் வருமாறு.

| பு.க. | ப.க. | பு.க. | ப.க. |
|---|---|---|---|
| 2.00- | 8.40, | 2.50- | 10.50, |
| 3.50- | 14.70, | 4.00- | 16.80, |
| 4.50- | 18.90, | 5.00- | 21.00, |
| 5.50- | 23.10, | 6.50- | 27.30, |
| 7.00- | 29.40, | 7 50- | 31.50, |
| 8.00- | 33.60, | 8.50- | 35.70, |
| 9.00- | 37.80, | 9.50- | 39.90, |
| 10.00- | 42.00. | | |

[கு]

### பயங்கரவாத...

மூன்று பெண் சந்தேகநபர்களை இம் மாதம் 31ஆம் திகதிக்குள் நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என்று காங்கேசன்துறை பொலீஸ் பொறுப்பதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டார். (கு)

### எதிர்காலச்...

வத்தில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பெண்டி ஜனாதிபதியின் செய்திக்குறிப்பைச் சபையில் வழங்கினார்.

அந்தச் செய்தியில் மேலும் ஜனாதிபதி குறிப்பிட்டதாவது:- தற்போது பாடசாலைக் கல்வி முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் சீர்திருத்தங்களைப் போல விரைவில் பல்கலைக் கழக கல்வி முறையும் மறுசீரமைக்கப்படும்.

புதிய கல்விச் சீர் திருத்தம் கட்டங்கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. இளைய தலைமுறையினரை மிலேனியத்தில் ஆற்றல் மிக்கவர்களாக திகழச்செய்வதே இதன் நோக்கமாகும் என்றும், இதன் மூலம் ஆற்றலும் திறமையும் மிக்க சந்ததி ஒன்றை உருவாக்கலாம் எனவும் அந்தக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-கு)

### யாழ்நகரில் கடந்த வருடம் நடந்த

# நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் பரீட்சை முடிவுகள் இன்று வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டுஇறுதிப் பகுதியில்நடத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகள் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

கணிதம், விஞ்ஞானம்; ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்காக நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் இப் பரீட்சையில் தரம் 6 தொடக்கம் உயர் தர வகுப்பு மாணவர்கள் வரை தோற்ற முடியும்.

கடந்த வருடம் நடந்த இப் பரீட்சையில் யாழ்ப்பாணத்தில் ஹாட்லிக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு வடமராட்சிக் கல்வி வலயத்தின் விஞ்ஞான உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. வேணுகோபால்; யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. க. பொன்னம்பலம் ஆகியோரின் அயராத முயற்சியே காரணம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

### சாட்சிகள்...

இம்மாத முற்பகுதியில் களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகளுக்கும சிறைச்சாலை அதிகாரிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது இடைக்கால அறிக்கையை நேற்று நீதி அமைச்சிடம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள சிறைக் கைதிகளின் தொகை எண்ணூறிலிருந்து ஐநூறாகக் குறைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்களிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மோதல் சம்பவங்களினால் இரண்டு தமிழ்க் கைதிகள் பலியானதுடன் 50க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பதும் மோதல்சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கென சிறைச்சாலைஆணையாளர் தலைமையில் விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும், [கு - 4]

# கடற்றொழிலாளர் கைகலப்பு

(தீவகம்)

கடற்றொழிலாளர் சங்கங்களுக் கிடையிலான கருத்து மோதல் கைகலப்பில் முடிந்த சம்பவமொன்று நேற்று வேலணையில் இடம்பெற்றுள்ளது.

வேலணை தெற்கு துறையூர் கடற்றொழிலாளர்களுக்கும், அம்பிகை நகர் கடற்றொழிலாளர்களுக்குமிடையில் பொதுச்சந்தையில் கடல் உணவுகளை சந்தைப்படுத்துவதில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே தகராறாக முடிந்ததாகக் கூறப்படுகின்றது. நிலைமை மோசமடைந்ததை அடுத்து கடற்படையினரின் தலையீட்டினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (கு-82)

### பூஸாவுக்கு...

னால் முன்னரைப் போல பல கலவரங்கள் இடம்பெறலாம். வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற கலவரங்களினால் 53 தமிழர்களும், பூசாவில் 17 பேரும், களுத்துறையில் 05 தமிழர்களும் பலியானது போன்றே பல சம்பவங்கள் இடம் பெறலாம் என்று அஞ்சப்படுகிறது எனவே எங்களை பூசாவுக்கு மாற்ற வேண்டாம். மாற்றுவதாயின் மகசீன் சிறைச்சாலைக்கே மாற்ற வேண்டும் என்றும் இது விடயமாக பாராளுமன்ற உறுப்பினராகிய நீங்கள் எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு-வ)

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜய் ஷாலினியின்
கண்ணுக்குள் நிலவு
(CD பிரதி)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயானியின்
சூரிய வம்சம்
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

# மக்கள் வங்கி வெற்றிடங்களுக்கு 42 பேருக்கு புதிய நியமனம்

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளிலுள்ளவெற்றிடங்களை நிரப்புவதற்கு 42 பேருக்கு புதிய நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது

சிற்றூழியர் தரத்தில் உள்ளவர்களுக்கும் எழுதுவினைஞர் தரத்திலுள்ளவர்களுக்கும் இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய மக்கள் வங்கி அலுவலகத்தில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 72 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

அதில் 42 பேருக்குரிய நியமனக் கடிதங்கள் கொழும்பிலிருந்து ஒரு அதிகாரி எடுத்துவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# தொலைக் கல்வியில் பயில்பவர்களை ஆசிரியர் கலாசாலைக்கு அனுமதிக்குக

## தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்வியில் கற்கும் ஆசிரிய மாணவர்களும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்து அங்கு பயிற்சி பெற வாய்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி யாழ். மாவட்டப் பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மகஜரில், தொலைக் கல்வி பயிற்சி நெறியில் பதிவு செய்து கொண்டவர்களில் குறித்த சில பாடம் தவிர்ந்த ஏனையவர்கள் ஆசிரியர் கலாசாலை அனுமதிக்கு விண்ணப்பிக்கமுடியாதென்று கல்வி அமைச்சின் அறிவிப்பால்பலர் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

எனவே இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கை மேற்கொண்டு எமது அனுமதிக்கு வசதி செய்து தர வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

இது குறித்து திருகோணமலையில் தங்கியுள்ள தமிழர் ஆசிரியர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. மகாசிவத்துடன் 'வலம்புரி' தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபொழுது இவ்விடயமாகத் தாம் உடனடியாகக் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு தொலைக் கல்வியில் பயிலும் ஆசிரிய மாணவர்களும் ஆசிரிய கலாசாலைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்க வேண்டுமெனக் கோரவுள்ளதாகவும் இக் கோரிக்கை வெற்றியளிக்குமெனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்தார். (ந)

# குப்பையிலிருந்த ஷெல் வெடித்தது

கல்வியங்காடு 3ம் கட்டைப் பகுதியில் குப்பை கொளுத்தும் போது நிலத்தில் புதையுண்டு கிடந்த ஷெல் ஒன்று வெடித்த சம்பவம் நேற்று மாலை 6 மணியளவில் இடம் பெற்றது.

பலத்த சத்தத்துடன் வெடித்த இச் ஷெல்லினால், அருகில் நின்ற எஸ், கணேஸ்வரன் [வயது 45[ என்பவர் சிறுகாயத்திற்குள்ளானார். (ந]

# வன்னிக்கான பயணம் இரத்து

[வவுனியா]

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு வவுனியாவிலிருந்து இன்று அனுப்பி வைக்கப்படவிருந்த பயணிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் அனுப்பி வைக்கப்பட்மாட டார்கள் என வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இப்பயணிகள் மறு அறிவித்தல்வரை அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் என்று அதிகாரிகள் மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது, (வ-கு)

### அரசின் அசமந்த...

வாக்கு மூலங்களைப் பதிவு செய்த போதிலும் தற்போதைய நிலைமைகளின் தேக்க நிலை காரணமாகவே இந் காலக்கெடுவை கேட்பதாக நீதிவானிடம் விண்ணப்பித்தார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய மேலதிக நீதிவான் செம்மணிப் புதைகுழி விசாரணைகளில் ஏற்பட்டுள்ள மந்த நிலை எனக்கு வேதனையளிக்கிறது புதைகுழிகளிலிருந்து 17 எலும்புக் கூடுகளும், மற்றும் தடையப் பொருட்கள் மீட்கப்பட்டன. அவற்றை ஜனவரி 24 ஆம் யாழ்ப்பாண மக்களின் பார்வைக்கு வைப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அரசதரப்பு அதற்கு தயாரில்லை. யாழ்ப்பாண மக்களுக்கு இடப்பெயர்வு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. இந்த இடப்பெயர்வு மட்டுமல்ல இன்னும் பல இடப் பெயர்வுகள் வரலாம். ஆனால் மக்கள் இந்த விசாரணைகள் ஒன்றால் எங்கிருந்தாலும் வருவார்கள் இந்த பொறுப்பை நான் ஏற்று ஒன்றரை வருடங்களாகி விட்டன. ஆனால் விசாரணைகள் முடிந்தபாடில்லை; சட்டத்தின் முன் எவரும் நிறுத்தப்படவில்லை கிரிஷாந்தி கொலைவழக்கின் முதலாவது எதிரி சோமரத்ன ராஜபக்ஷ கூறியபடி ஏனைய 14 படை வீரர்களும் கைது செய்யப்பட்டு இன்று வரை நீதி மன்றத்தில் நிறுத்தப்படவில்லை. இதனால் நீதியின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை வீணடிக்கப்படலாம் என்று அதிருப்தி தெரிவித்தார்

செம்மணிப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளும், தடையப் பொருள்களும். அடையாளம் காணப்படுவதற்காகப் பொதுமக்களின்பார்வைக்காகஎதிர்வரும் பெப்ரவரி 21 ஆம் திகதி வைக்கப்படுவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அப்பாவித்தமிழர்கள் பல நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப் பட்ட சம்பவங்களுக்குச் சான்றாக போதிய தடையப் பொருட்கள் மீட்கப்பட்ட போதிலும் வழக்கு விசாரணைகளில் காணப்படும் இழுத்தடிப்பு அரசின் அசமந்தப் போக்கைக் காட்டுவதாக காணமற் போனவர்களின் பெற்றோர் பாதுகாவலர்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்டது, (கு-வ)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.